1994 ஏப்ரல் 13]

268—

தலைவாசலில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைத்தல்

*** 24138—திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசலில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தாலுக்கா தலைவாசலில் 11-1-1980 முதல் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சிப் பாகுபாடின்றி, மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற அண்ணா அவர்களுடைய தாரக மந்திரத்திற்கேற்ப நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தலைவாசல் தொகுதிக்கு இதைக் கொடுத்ததற்காக சேலம் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் இன்னும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் தொடங்கப்படாமல் இருக்கக்கூடிய இடங்கள் உள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சிப் பாகுபாடின்றி, மாற்றான் தோட்டத்து மல்லிகைக்குச் சொந்தம் என்று சொல்லப்படுகிற தொகுதிக்குக் கூட இன்றைக்கு புரட்சித்தலைவி அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களைச் செய்து வருவதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்கிறேன், தமிழக மக்களின் ஒட்டுமொத்த நம்பிக்கையைப் பெற்றவர் நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஆள் காட்டுகிறவர்களுக்குத்தான் மக்கள் வாக்கு அளிக்கிறார்கள் என்பதை நாடே இன்றைக்குப் புரிந்து கொண்டிருக்கிறது. எனவே, சேலம்

மாவட்டத்தில் தேவைப்படுகிற இடத்திற்கு விவசாயிகளின் நலன் கருதி, நிதிநிலைக்கு ஏற்றவாறு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 269, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

269—

நாமக்கல் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரிக்கு நிலம் வழங்கிய குடும்பங்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

*** 9661**— திருமதி ப. சரஸ்வதி:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரிக்கு நிலம் எடுக்கப்பட்ட குடும்பங்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு நிலம் அளித்தவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு பல்கலைக் கழகத்தில் வேலை வழங்க அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர் ஒன்றியம், நாமக்கல் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரிக்கு நிலம் எடுக்கப்பட்டவர்களின் குடும்பங்களில் மிகவும் ஏழ்மைப்பட்டு, விவசாயத்தை நம்பி வாழ்ந்த அந்தக் குடும்பங்கள் தங்களுடைய அனைத்து நிலங்களும் கால்நடைக் கல்லூரிக்கு எடுக்கப்பட்ட பிறகு, அவர்கள் பணம் கொடுத்திருந்தாலும், அந்தப் பணத்தை வைத்து எந்தத் தொழிலையும் தொடங்க இயலாமல், வியாபாரம் செய்ய அவர்களுக்குத் தேவைப்படுகிற அறிவாற்றல் இல்லாமல், கூலி ஜீவனம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று உத்தரவாதம் கொடுத்ததாக அறிகிறேன். அவர்களின் குடும்பங்களுடைய வாரிசுகளுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.